# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


**முன்னிலை**

**திரு.பி.தாமரைக்கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 13036/விசாரணை/E/2023**

திரு.P.ரவீந்திரன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை மேற்கு, மதுரை மாவட்டம்-625 001. .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் **07.10.2025** அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், மதுரை மேற்கு வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ம.புவனேஸ்வரி 03.03.2026 அன்று நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளர் கோரிய கோப்பு எண்.776/2021/B மதுரை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வரப்பெற்றுள்ளதா எனத் தெரிவிக்க் கோரி 13.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக கோரியுள்ளதாகவும், மேற்குறித்த கோப்பு குறித்த தகவல் வருவாய் கோட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்டவுடன், அதனை மேல்முறையீட்டாளருக்கு வழங்கி, அது குறித்த அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்வதாக எடுத்துரைத்ததன் அடிப்படையில், இவ்வாணையத்தால் 20.03.2026 அன்று கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது :-

> *3. ஆகவே இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், இவ்வாணையத்தின் 07.10.2025 தேதியிட்ட உத்தரவினை முழுமையாக நிறைவேற்றி, அது குறித்த அறிக்கையை 20.04.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் மூலம் தவறாமல் நேரில் சமர்ப்பிக்குமாறு மதுரை மேற்கு வட்டாட்சியர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது. தவறும்பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்றும் இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.*

*2. மேற்குறித்த உத்தரவின் அடிப்படையில்,* மதுரை மேற்கு வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ம.புவனேஸ்வரி 06.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய கோப்பு எண்.776/2021/பி-ன் நகலை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து

பெறப்பட்டு இணைத்து (256 பக்கங்கள் கொண்டது) 01.04.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, அதனை மேல்முறையீட்டாளர் 02.04.2026 அன்று பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, மேற்குறித்த கடிதத்தின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் Tracking Report-ன் நகல் ஆகியவற்றை இணைத்து சமர்ப்பித்ததன் அடிப்படையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதி, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள் : 07.05.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 13036/விசாரணை/E/2023**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மதுரை மேற்கு, மதுரை மாவட்டம்-625 001.

திரு.P.ரவீந்திரன்
32 ஷாலினி தெரு, துரைச்சாமி நகர்,
பை-பாஸ், மதுரை-625 016.

Copy to: File

RJ/PS 8.5